Royal College of Anaesthetists

Association of Anaesthetists

Association of Paediatric Anaesthetists of Great Britain and Ireland

# உங்கள் குழந்தையின் பொது மயக்க மருந்து

குழந்தையோ அல்லது இளைய நபரோ பொது மயக்க மருந்து மூலம் அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள மருத்துவமனைக்கு வரும்போது என்ன எதிர்பார்க்கலாம் என்பதை இந்தச் சிற்றேடு விளக்குகிறது. இது நோயாளியின் பிரதிநிதிகள், பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுடன் இணைந்து செயல்படும் மயக்க மருந்து நிபுணர்களால் எழுதப்பட்டது.

## உள்ளடக்கம்

இந்தச் சிற்றேடு விளக்குவன:

- மயக்க மருந்து பற்றிய பொதுவான தகவல்கள் மற்றும் உங்கள் குழந்தையை கவனித்துக் கொள்ளும் குழு
- உங்கள் குழந்தையை ஒரு அறுவைச் சிகிச்சைக்கு எவ்வாறு தயார் செய்வது
- குழந்தைகள் மற்றும் இளையவர்களுக்கான தகவல் வளங்களை எங்கே கண்டுபிடிப்பது
- அறுவைச் சிகிச்சைக்கு முன் என்ன நடக்கும்
- அறுவைச் சிகிச்சை நாளன்று என்ன நடக்கும்
- அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு என்ன நடக்கும்
- ஆபத்து மற்றும் பகிர்ந்து முடிவெடுத்தல்.

## மயக்க மருந்து பற்றி

பொது மயக்க மருந்து உங்கள் குழந்தை ஆழமான தூக்கம் போன்ற நிலையில் இருப்பதையும், ஒரு அறுவைச் சிகிச்சை அல்லது நடைமுறையின் போது வலி இல்லாதிருப்பதையும் உறுதி செய்கிறது.

மயக்க மருந்துகள் என்பன மயக்க மருந்தைத் தொடங்கவும் பராமரிக்கவும் பயன்படுத்தப்படும் மருந்துகள்.

- சில மயக்க மருந்துகள் கானுலா எனப்படும் பிளாஸ்டிக் குழாயைப் பயன்படுத்தி நரம்புக்குள் மருந்தை அனுப்புவதில் தொடங்குகின்றன.
- மற்ற மயக்க மருந்துகள் வாய் மற்றும் மூக்கின் மீது வைக்கப்பட்ட முகமூடி மூலம் வாயுவை சுவாசிப்பதன் மூலம் தொடங்குகின்றன. வழக்கமாக, உங்கள் குழந்தை தூங்கும்போது ஒரு கானுலா வைக்கப்படும்.

- தொடர்ந்து வாயுவை சுவாசிப்பதன் மூலமாகவோ அல்லது கானுலா வழியாக மயக்க மருந்து கொடுப்பதன் மூலமாகவோ அல்லது இந்த இரண்டின் கலவையிலோ மயக்க மருந்தை பராமரிக்க முடியும்.

மயக்க மருந்து நிபுணர்கள் என்பவர்கள் நிபுணத்துவம் வாய்ந்த மருத்துவர்கள், அவர்கள் மயக்க மருந்து கொடுத்து, அறுவைச் சிகிச்சையின் போதும் மற்றும் குணமடையும் போதும் உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்தைக் கவனித்துக் கொள்கிறார்கள். அறுவைச் சிகிச்சைக்கு பின் உங்கள் குழந்தையின் வலி நிவாரணத்தில் அவர்கள் நெருக்கமாக ஈடுபடுகிறார்கள்.

# அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு மருந்தகம் / தொலைபேசி மூலம் சோதனைக் கணிப்பு

அறுவைச் சிகிச்சை நாளுக்கு முன்பு உங்கள் குழந்தையின் உடல்நலம் மற்றும் மருந்துகள் பற்றிய சில விவரங்களைப் பெற மருத்துவமனையில் இருந்து ஒரு செவிலியர் உங்களை அழைக்க ஏற்பாடு செய்யலாம். தேவைப்பட்டால், கூடுதல் சோதனைகள் அல்லது உபகரணங்களை, அறுவைச் சிகிச்சை நாளுக்கு முன்பே ஒழுங்கமைக்க இது அவர்களுக்கு நேரத்தை அனுமதிக்கிறது.

பல மருத்துவமனைகள், குழந்தைகளை, குறிப்பாக நீண்ட கால நோய் உள்ள அல்லது பெரிய அறுவைச் சிகிச்சை செய்து கொள்பவர்களை, அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டு மருந்தகத்தில் கலந்துகொள்ள அழைக்கும். அங்கு மருத்துவர்கள் உங்கள் குழந்தையின் உடல்நலம், எடுத்துக்கொள்ளும் மருந்துகள் மற்றும் ஒவ்வாமைகள் தொடர்பான கேள்விகளைக் கேட்பார்கள். அறுவைச் சிகிச்சைக்கு முன்னர் ஏதாவது தொற்றுக்கள் உள்ளனவா என அறியவும் தேவையான இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ளவும் அவர்கள் தோலில் இருந்து கசம நீர் மாதிரியை (தோலினை மிருதுவான பஞ்சுத்துண்டைப் பயன்படுத்தி மெதுவாக அழுத்தி) எடுப்பார்கள்.

நீங்கள் ஒரு மயக்க மருந்து நிபுணரையும் கூட சந்திக்கலாம், அவர் மயக்க மருந்து விருப்பத்தேர்வுகள் மற்றும் ஏதேனும் குறிப்பிட்ட அபாயங்களைப் பற்றியும் விவாதிக்கலாம். மயக்க மருந்து நிபுணர் அல்லது முன் மதிப்பீட்டு செவிலியர் பொதுவாக மயக்க மருந்து அல்லது ஊசி மருந்துகளுடன் உங்கள் குழந்தையின் முந்தைய அனுபவங்களைப் பற்றி உங்களிடம் கேட்பார், எடுத்துக்காட்டாக தடுப்பூசிகள். ஒரு வகை மயக்க மருந்து மற்றொன்றை விட ஏன் சிறந்ததாக இருக்கக்கூடும் என்பதற்கு பெரும்பாலும் மருத்துவ காரணங்கள் உள்ளன. மயக்க மருந்தைத் தொடங்க அவர்கள் எவ்வாறு பரிந்துரைக்கிறார்கள் மற்றும் அதற்கான காரணங்கள் குறித்து அவர்கள் உங்களுடன் விவாதிப்பார்கள்.

உங்களுடன் கலந்துரையாடிய பிறகு, ஒரு திட்டம் ஒப்புக் கொள்ளப்படும். சில நேரங்களில் அறுவைச் சிகிச்சை நாளன்று உங்கள் குழந்தையின் எதிர்வினை மற்றும் மறுமொழி பொறுத்து திட்டத்தை மாற்ற வேண்டியிருக்கும்.

அறுவைச் சிகிச்சை நாளன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ உங்களுக்கு ஏதேனும் சிக்கல்கள் இருந்தால், எந்த நேரத்திலும் நீங்கள் அதை எழுப்ப முடியும்.

## உங்கள் குழந்தையைத் தயார் செய்தல்

உங்கள் குழந்தை மருத்துவமனை வருவதற்கு முன்னேற்பாடு செய்ய நீங்கள் செய்யக்கூடிய பல விஷயங்கள் உள்ளன. உங்கள் குழந்தை மிகவும் இள வயதில் இருந்தாலே தவிர, நீங்கள் முயற்சி செய்து பின்வருவதை விளக்க வேண்டும்:

- அவர்கள் மருத்துவமனைக்குச் செல்கிறார்கள் என்று
- அவர்களுக்கு ஒரு அறுவைச் சிகிச்சை நடைபெறப் போகிறது அல்லது ஒரு உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படப் போகிறார்கள் என்று
- அவர்கள் மருத்துவமனையில் இருக்கும்போது அவர்களுக்கு என்ன நடக்கும் என்பது பற்றிய சில அடிப்படைத் தகவல்கள்.

இந்தத் தகவலைச் சொல்ல சிறந்த நேரம் குழந்தைக்கு குழந்தை வேறுபடும். பாலர் பள்ளிக் குழந்தைகள் அநேகமாக முந்தைய நாளில் தெரிந்து கொண்டாலே போதுமானது. வயதானக் குழந்தைகளுக்கு அதிக நேரம் தேவைப்படலாம்.

எங்கள் இணையதளத்தில் வெவ்வேறு வயது குழந்தைகளுக்கான துண்டுப்பிரசுரங்களும் உள்ளன, அவை வெவ்வேறு மொழிகளிலும் இங்கே கிடைக்கின்றன: www.rcoa.ac.uk/patientinfo/translations#languages. கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தின் குழந்தை மருத்துவ மயக்கமருந்து சங்கத்திலும் கூட கூடுதல் தகவல்கள் உள்ளன:www.apagbi.org.uk/children-and-young-people

சில மருத்துவமனைகள் குழந்தைகளுக்கு அறுவைச் சிகிச்சைக்கு முந்திய நாளன்று குழந்தைகளின் அறுவைச் சிகிச்சை பிரிவு அல்லது மயக்கமருந்து அல்லது அறையைப் பார்வையிட வாய்ப்பை வழங்குகின்றன. உங்கள் குழந்தையைத் தயார் செய்ய உதவவும் மற்றும் பதட்டத்தைக் குறைக்கவும் இது ஒரு சிறந்த வழியாகும். சில மருத்துவமனைகள் செயலிகள் மற்றும் வீடியோக்கள் மூலம் மெய்நிகர் சுற்றுப்பயணங்களை வழங்குகின்றன.

பல மருத்துவமனைகளில் ஒரு விளயாட்டு-சிகிச்சை குழு உள்ளது, அவர்கள் விளக்கங்களை வழங்கலாம் மற்றும் விளையாட்டுகள் மூலம் கலந்துரையாடலை ஊக்குவிக்க முடியும்.

### உங்கள் குழந்தைக்கு என்ன சொல்ல வேண்டும்

- அறுவை சிகிச்சை அல்லது சோதனை உங்கள் குழந்தையை நன்றாக ஆகும்படியாக அல்லது தற்போதுள்ள மருத்துவ நிலையை மேம்படுத்தவோ உதவும் என்பதை விளக்குங்கள்.
- அறுவைச் சிகிச்சையைப் பற்றி பேசவும் கேள்விகளைக் கேட்கவும் உங்கள் குழந்தையை ஊக்குவிக்கவும். புத்தகங்கள், விளையாட்டுகள் மற்றும் கதைகள் உதவக்கூடும்.
- உங்கள் குழந்தைக்கு (அறுவைச் சிகிச்சை) நேரம் பற்றி சொல்லுங்கள். அவர்களுக்கு எப்போது அறுவைச் சிகிச்சை அல்லது சோதனைகள் இருக்கும்? அவர்கள் மருத்துவமனையில் எவ்வளவு காலம் தங்கியிருப்பார்கள் (இது உங்களுக்குத் தெரிந்திருந்தால்)?

- உங்கள் குழந்தை அன்றிரவு மருத்துவமனையில் தங்கினால், நீங்களும் தங்க முடியுமா என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். இது சாத்தியமா என்று நிச்சியமாக உங்களுக்குத் தெரியாவிட்டால், உறுதிப்படுத்திக் கொள்ள நீங்கள் மருத்துவமனையை அழைக்கலாம்.

## மருத்துவமனைக்கு என்ன கொண்டு வர வேண்டும்

நீங்கள் மருத்துவமனைக்கு எதை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்து உங்கள் செவிலியர் உங்களுக்கு ஆலோசனை வழங்க முடியும், ஆனால், பின்வருபவற்றை தயவுசெய்து கொண்டு வாருங்கள்:

- உங்கள் குழந்தை வழக்கமாக எடுத்துக்கொள்ளும் எந்தவொரு மருந்தும் அசல் கட்டுடன்
- பைஜாமா, செருப்புகள், மாற்று ஆடைகள், மாற்றுவதற்கு உள்ளாடைகள் அல்லது நாப்கின்கள்
- பல் விளக்கும் பிரஷ், பேஸ்ட், ஹேர்பிரஷ் மற்றும் கழிப்பறை பொருட்கள்
- பிடித்த டெட்டி அல்லது பொம்மை
- ஒரு புத்தகம் அல்லது வரைதல் திண்டு
- கைப்பேசிகள் மற்றும் மின்னணு சாதனங்கள் ஆனால் மின்னூட்டிகள் மற்றும் ஹெட்ஃபோன்களுடன்.

குழந்தைகள் பெரும்பாலும் எதைப் பொதி செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் மகிழ்ச்சியடைகிறார்கள், ஆனால் அதிகமான பொம்மைகளைச் சேர்க்காமல் இருப்பது நல்லது, ஏனெனில் அடிக்கடி பொம்மைகள் மற்றும் நடவடிக்கைகள் மருத்துவமனையால் வழங்கப்படுகின்றன.

## அறுவைச் சிகிச்சைக்கு முன் உடல் நிலை சரியாக இல்லையா?

அறுவைச் சிகிச்சைக்கான நாளிலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன் உங்கள் குழந்தைக்கு குறிப்பிடத்தக்க இருமல் அல்லது சளி ஏற்பட்டால், அல்லது அறுவை சிகிச்சைக்கு சில நாட்களுக்குள் வயிற்றுப்போக்கு அல்லது வாந்தி ஏற்பட்டால் நீங்கள் மருத்துவமனையை  தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள வேண்டும். உங்கள் குழந்தை உடல்நிலை நன்றாக ஆகும்வரை அறுவைச் சிகிச்சையை தள்ளிப்போட வேண்டி இருக்கலாம்.

மயக்கமருந்து எடுத்துக் கொண்டிருக்கும்போது, இருமல் மற்றும் சளி குழந்தைகளுக்கு குறிப்பாக இளைய குழந்தைகளுக்கு சுவாசிப்பதற்கு அதிக சிரமங்களை ஏற்படுத்துவது சாத்தியம். அவைகள் குழந்தைகளை மார்பு தொற்று ஏற்படுவதற்கான அதிக அபாயத்தில் வைக்கக் கூடும். எனவே உங்கள் குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாமல் இருந்தால் மருத்துவமனை ஊழியர்களுக்கு அதைத் தெரியப்படுத்துவது முக்கியம்.

உங்கள் குழந்தை, சின்னம்மை, தட்டம்மை அல்லது பிற நோய்த்தொற்றுகளினால் சமீபத்தில் பாதிக்கப்பட்டு இருந்தாரா என்பதை நீங்கள் மருத்துவமனையில் உள்ள ஊழியர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

அண்மையில் தடுப்பூசி போட்டுக்கொண்ட குழந்தைகளுக்கு மயக்கமருந்து கொடுப்பது சாதாரணமாக ஒரு பிரச்சனை இல்லை, ஆனால் அக்குழந்தைக்கு

அறுவைச் சிகிச்சைக்கு முன் அதிக காய்ச்சல் ஏற்படுமானால், சில சந்தர்ப்பங்களில் அறுவைச் சிகிச்சையை தள்ளிப்போடுவது சிறந்தது. இது மிகவும் அசாதாரணமானது, எனவே திட்டமிட்டபடி தடுப்பூசிகளைத் தொடரவும், திட்டமிடப்பட்ட அறுவை சிகிச்சையின் காரணமாக அவற்றை ஒத்திவைக்க வேண்டாம் என்றும் நாங்கள் பெற்றோருக்கு அறிவுறுத்துகிறோம்.

# ஆபத்து மற்றும் பகிர்ந்துகொள்ளப்பட்ட முடிவெடுத்தல்

நவீன மயக்கமருந்துகளில் தீவிரப் பிரச்சினைகள் சாதாரணமாகக் கிடையாது. அறுவைச் சிகிச்சை மற்றும் மயக்க மருந்துக்குப் பிறகு பெரும்பாலான குழந்தைகள் விரைவாக குணமடைந்து, விரைவில் இயல்பு நிலைக்கு வருவார்கள். பல குழந்தைகள் சுகமின்மையாக உணரலாம், அல்லது தொண்டையில் இரணம் இருக்கலாம். இவைப் பொதுவாக ஒரு குறுகிய காலம் நீடிக்கும். வாந்தி மற்றும் சுகமின்மைக்கு சிகிச்சையளிப்பதற்கான மருந்துகள் இருக்கின்றன மற்றும், பெரும்பாலும் வழங்கப்படுகின்றன.

**குழந்தைகள் மற்றும் இளம் வயதினருக்கு பொது மயக்க மருந்தை எடுத்துக் கொள்வதால் ஏற்படும் பொதுவான நிகழ்வுகள் மற்றும் அபாயங்கள் பற்றிய கூடுதல் தகவல்களை எங்கள் இணையதளத்தில் காணலாம், அவை இங்கே வெவ்வேறு மொழிகளில் கிடைக்கின்றன:www.rcoa.ac.uk/patientinfo/translations#languages**

## பகிர்ந்து கொள்ளப்பட்ட முடிவெடுத்தல்

தனிநபர்கள் தங்களுக்கு சரியான முடிவுகளை எடுப்பதற்கு ஆதரவளிக்க பகிர்ந்து கொள்ளப்பட்ட முடிவுகள் உறுதி அளிக்கின்றன. இது ஒரு கூட்டு செயல்முறை வழி, இதன் வாயிலாக ஒரு மருத்துவர் நோயாளி சிகிச்சையைப் பற்றி முடிவெடுக்க அவருக்கு உதவுகிறார்.

இந்த உரையாடல் கீழ்க்கண்டவற்றை ஒன்றிணைக்கிறது:

- சிகிச்சை விருப்பத்தேர்வுகள், சான்றுகள், அபாயங்கள் மற்றும் நன்மைகள் போன்றவைகளில் மருத்துவரின் நிபுணத்துவம்
- நோயாளிக்கு எவை மிக நன்றாகத் தெரியும்: அவர்களின் விருப்பங்கள், தனிப்பட்ட சூழ்நிலைகள், குறிக்கோள்கள், மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகள்.

மேலும் அறிய கீழ்கண்ட இணையதளத்தில் பார்க்கவும்:www.england.nhs.uk/personalisedcare/shared-decision-making

உங்கள் மயக்க மருந்து நிபுணர் அல்லது அறுவை சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீடு ஊழியர்களுடன் உங்கள் கலந்துரையாடல்களை சிறப்பாக பயன்படுத்துவதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய சில கருவிகள் இங்கே:

### புத்திசாலித்தனமாக தேர்ந்தெடுத்தல் UK BRAN கட்டமைப்பு

சிகிச்சை பற்றிய கேள்விகளைக் கேட்க இதை நினைவூட்டலாகப் பயன்படுத்தவும்.
https://bit.ly/CWUK_leaflet

### NHS மூன்று கேள்விகளைக் கேட்கிறது

உங்கள் உடல்நல பராமரிப்பு பற்றி தேர்வுகள் செய்ய வேண்டியது இருக்கலாம்.
https://bit.ly/NHS_A3Qs

### அறுவை சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு மையம் (CPOC)

பகிர்ந்த முடிவெடுப்பதை விளக்குவதற்கு, அறுவைச் சிகிச்சைக்கு முந்தைய பராமரிப்பு மையம் ஒரு இயங்குபடத்தை உருவாக்கியுள்ளது.
www.cpoc.org.uk/shared-decision-making

# உங்கள் குழந்தையின் அறுவைச் சிகிச்சை தினத்தன்று

உங்கள் குழந்தை எப்போது சாப்பிடுவதையும் குடிப்பதையும் நிறுத்த வேண்டும் என்பது பற்றிய தெளிவான வழிமுறைகளை மருத்துவமனை உங்களுக்கு வழங்க வேண்டும். இந்த அறிவுரைகளைப் பின்பற்றுவது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் முக்கியமானதாகும்.

மயக்க மருந்து வழங்குதலின் போது உங்கள் குழந்தையின் வயிற்றில் உணவு அல்லது திரவம் இருந்தால், அது தொண்டையின் பின்பகுதியில் வந்து நுரையீரலுக்குள் இறங்கலாம். உங்கள் குழந்தை மிக சமீபத்தில் உணவை சாப்பிட்டிருந்தால், அறுவை சிகிச்சை தாமதிக்கப்படும் அல்லது மற்றொரு நாளைக்கு ஒத்திவைக்கப்படலாம்.

உணவு மற்றும் குடிபானங்களுக்காக குழந்தைகள் தேவைக்கு அதிகமாக காக்கவைக்கப் படாவிட்டால் குழந்தைகள் மிக அதிக சௌகரியமாக இருப்பார்கள். சில மருத்துவமனைகள் மருத்துவமனைக்கு வந்தவுடன் குழந்தைகளை ஏதாவது குடிக்க அனுமதிக்கின்றன அல்லது ஊக்குவிக்கின்றன.

அவசரம்- அல்லாத அறுவைச் சிகிச்சைக்கு முன் உங்கள் குழந்தைக்கு எப்போது சாப்பிட அல்லது குடிக்க கொடுக்கலாம் என்பதற்கான பொதுவாக ஒப்புக் கொள்ளப்பட்ட நேரங்கள் பின்வருமாறு, ஆனால் தயவுசெய்து உங்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவமனையின் வழிமுறைகளைப் பின்பற்றவும், ஏனெனில் அவை வேறுபட்டிருக்கலாம்.

- சிகிச்சைக்கு ஆறு மணி நேரங்களுக்கு முன்னர் இலேசான உணவு மற்றும் /அல்லது அத்துடன் ஒரு கோப்பை பால் உட்கொள்ளலாம். அதன் பிறகு அவர்கள் இனிப்புகள் உட்பட எதையும் சாப்பிடக்கூடாது, சூயிங்கம் மெல்லுவதைத் தவிர்க்க வேண்டும்.

- தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் அவர்களின் அறுவைச் சிகிச்சைக்கு நான்கு மணிநேரங்களுக்கு முன்னர் வரை தாய்ப்பால் குடிக்கலாம்.
- அறுவைச் சிகிச்சைக்கு ஆறு மணிநேரம் முன்புவரை புட்டிப்பால் ஊட்டப்படும் குழந்தைகள் புட்டிப்பால் சாப்பிடலாம் (மிகச் சிறிய அல்லது முன்கூட்டியே பிறந்த குழந்தைகளுக்கு ஏதேனும் வித்தியாசமான வழிமுறைகள் உள்ளனவா என்று உங்கள் மருத்துவமனையுடன் சரிபார்க்கவும்).
- குழந்தைகள் தங்கள் அறுவை சிகிச்சைக்கு ஒரு மணி நேரம் முன்பு வரை தொடர்ந்து தண்ணீர் அல்லது மிகவும் நீர்த்த பழச்சாறு குடிக்க வேண்டும். இது அவர்கள் நன்கு நீரேற்றமாகவும் வசதியாகவும் இருக்க உதவுகிறது.

உங்கள் குழந்தை அறுவை சிகிச்சை நாளன்று அறிவுறுத்தப்பட்டபடி மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நீங்கள் மருத்துவமனைக்கு வந்ததும், உங்கள் குழந்தையின் எடை எடுக்கப்படும் (இது ஏற்கனவே ஒரு பின் சந்திப்பில் செய்யப்படவில்லை என்றால்). ஒரு செவிலியர், அவர்களின் உடல் வெப்பநிலை, துடிப்பு மற்றும் சுவாச விகிதத்தை சரிபார்த்து அவர்களின் ஆக்ஸிஜன் அளவு மற்றும் இரத்த அழுத்தத்தை அளவிடுவார்.

12 வயதுக்கு மேற்பட்ட எந்தவொரு பெண்ணுக்கும், சிறுநீர் மாதிரியை சேகரித்து கர்ப்ப பரிசோதனை செய்வது நிலையான நடைமுறை. மேலும் தகவல்களை இங்கே காணலாம்: https://bit.ly/NHS-Leaflet

செவிலியர் மருந்துகள் மற்றும் ஒவ்வாமை பற்றி கேட்பார், மேலும் உங்கள் குழந்தையின் மணிக்கட்டு அல்லது கணுக்கால் மீது இரண்டு அடையாள பட்டைகளை கட்டி விடுவார். உங்கள் குழந்தைக்கு ஏதேனும் ஒவ்வாமை இருந்தால், சில மருத்துவமனைகளில் அவர்கள் கூடுதல் பட்டை அல்லது வேறு நிறத்தில் ஒரு பட்டையைப் போடுவார்கள்.

உங்கள் குழந்தையின் மயக்க மருந்து பற்றி விவாதிக்க ஒரு மயக்க மருந்து நிபுணர் உங்களை செயல்முறைக்கு முன் சந்திப்பார்.

மயக்க மருந்து நிபுணர் உங்கள் குழந்தையின் பொது ஆரோக்கியத்தைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும், அவற்றுள்:

- முந்தைய மயக்க மருந்தேற்றல் அனுபவங்கள்
- உங்கள் குழந்தை எடுத்துக்கொள்ளும் எந்த மருந்துகளும்
- அவர்களுக்கு உள்ள ஏதேனும் ஒவ்வாமை
- அண்மையில் அவர்களுக்கு ஏற்பட்ட இருமல், காய்ச்சல் அல்லது வயிற்றோட்டம் மற்றும் வாந்தி.

உங்கள் குழந்தைக்கு அல்லது பிற குடும்ப உறுப்பினர்களுக்கு ஒரு மயக்க மருந்து தொடர்பாக முந்தைய சிரமங்கள் ஏதாவது இருந்தால், மயக்க மருந்து நிபுணரிடம் சொல்வதும், உங்களிடம் அல்லது உறவினரிடம் உள்ள எந்தவொரு தகவலையும் கொண்டு வருவது மிகவும் முக்கியம்.

மயக்க மருந்து குறித்து உங்களுக்கோ அல்லது உங்கள் குழந்தைக்கோ இருக்கும் ஏதேனும் குறிப்பிட்ட கவலைகளைப் பற்றி பேச இது ஒரு நல்ல நேரம். நீங்கள் கேட்க விரும்பும் கேள்விகளின் பட்டியலை உருவாக்குவது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

உங்கள் குழந்தை செய்துகொள்ளும் அறுவைச் சிகிச்சையின் வகையைப் பொறுத்து, மயக்க மருந்து நிபுணரால் உங்கள் குழந்தை தூங்கும் போது ஓரிட உணர்ச்சி நீக்கி மூலம் நரம்புகளை உணர்ச்சியற்று போகும்படி செய்து அவர்களுக்குப் பின்னர் வலி நிவாரணத்தில் உதவும்படி செய்யமுடியும்.

அவர்களுக்கு மேலும் அதிக துளி மருந்தேற்றல் அல்லது கானுலா பயன்படுத்த வேண்டி இருக்கலாம். அவர்கள் இதனை மேற்கொள்வதற்கான காரணம் குழந்தை உறக்கத்தில் உள்ள நிலையில் அதனை பாதுகாப்பதற்கு மற்றும் உறக்கத்தில் இருந்து விழித்தெழும் வேளை குழந்தை சௌகரியமாக உணர்வதற்கு மற்றும் இக்கருவியின் முக்கியத்துவம் போன்ற விடயங்களை உங்களுடன் கலந்துரையாடுவார்கள்.

## அறுவைச் சிகிச்சை அல்லது சோதனையை தாமதப்படுத்தல்

சில சமயங்களில் உங்கள் குழந்தையின் மதிப்பீட்டின் போது, மயக்க மருந்து நிபுணர் உங்கள் குழந்தையைப் பற்றி அறியும் தகவல்களால் குறிப்பிட்ட தினத்தில் அறுவைச் சிகிச்சை செய்யாமல் இருப்பது குழந்தையின் நலத்திற்கு நல்லது என்ற முடிவுக்கு வரலாம். இது நடந்தால், நடைமுறையை செய்வது எப்போது பாதுகாப்பாக இருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்று அவர்கள் அறிவுரை அளிப்பார்கள்.

## முன் மருந்து வழங்கல் ('முன்-மருந்து')

மயக்க மருந்துக்கு முன் கொடுக்கப்படும் எந்த மருந்துக்கும் இதுவே பெயராகும்.

உங்கள் குழந்தை ஓய்வெடுக்க உதவ அமைதிப்படுத்தும் மருந்துகளின் அவசியத்தை மயக்க மருந்து நிபுணர் உங்களுடன் விவாதிக்கலாம். இருப்பினும், இவை வழக்கமாக வழங்கப்படுவதில்லை, ஏனெனில் அவை அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு குழந்தைகளைத் தூக்கமயமாக்கும். வலி நிவாரண மருந்துகளும் முன் மருந்தாக கொடுக்கப்படலாம் அல்லது ஆஸ்துமா போன்ற நிலைமைகளுக்கு கூடுதல் சிகிச்சையை மயக்க மருந்து நிபுணர் பரிந்துரைக்கலாம்.

பெரும்பாலான முன் மருந்துகள் வாய் மூலம் திரவ மருந்துகளாக வழங்கப்படுகின்றன, ஆனால் சில மருத்துவமனைகள் மற்ற முறைகளைப் பயன்படுத்துகின்றன.

## ஓரிட உணர்ச்சிநீக்கி குழைமம்

ஏறக்குறைய எல்லா குழந்தைகளுக்கும் தங்கள் கைகளின் பின்புறத்தில் உணர்ச்சியற்ற நிலை ஏற்படுத்தும் குழைமம் தடவப்பட்டு தெளிவான காயக்கட்டினால் மூடப்பட்டிருக்கும். இது வேலை செய்ய 30--60நிமிடங்கள் எடுத்துக் கொள்ளக்கூடிய ஒரு ஓரிடத்து உணர்வுநீக்கி குழைமம்.

உங்கள் குழந்தையின் கை அல்லது மேல்கையில் ஒரு கானுலா வைக்கப்படும்போது இந்தக் குழைமம் உணர்வைக் குறைக்கிறது.

குழைமம் பயன்படுத்த முடியாவிட்டால், ஓரிடத்து உணர்வுநீக்கி குளிர் ஸ்ப்ரேயைப் பயன்படுத்தி, அந்த பகுதியை உணர்ச்சியற்றதாக மாற்றலாம்.

## அறுவைச்சிகிச்சை அரங்கிற்கு செல்லும்போது

பெரும்பாலான மருத்துவமனைகள் அறுவை சிகிச்சை அரங்கிற்குச் செல்லும்போது உங்கள் குழந்தை அணிய வண்ணமயமான அங்கிகள்

வழங்குகின்றன. உங்கள் குழந்தை தங்கள் சொந்த ஆடைகள் அல்லது பைஜாமாவை அணிய முடியும். தேவைக்கேற்ப அவர்கள் ஒரு அணையாடை அல்லது இழுத்து மாட்டிக்கொள்ளும் ஆடைகளை அணியலாம். எந்த உள்ளாடைகளை அணியலாம் என்று உங்கள் செவிலியர் உங்களுக்கு ஆலோசனைக் கூறுவார்.

உங்கள் குழந்தை மயக்க மருந்து அறைக்கு நடந்து செல்லலாம், படுக்கை, சக்கர நாற்காலி அல்லது மருத்துவமனை தள்ளுவண்டியில் பயணம் செய்யலாம் அல்லது தூக்கி எடுத்துச் செல்லப்படலாம். சில மருத்துவமனைகள் அதிக வேடிக்கையான போக்குவரத்து வகைகளை வழங்குகின்றன. சில மருத்துவமனைகளில், ஒரு மின்சார காரில் பயணம் செய்யும் சலுகையை அவர்கள் வழங்கலாம்.

## மயக்கமருந்து அறையில்

வார்டைச் சேர்ந்த விளையாட்டு நிபுணர் போன்ற ஒரு செவிலியர் அல்லது சுகாதார பராமரிப்பு பயிற்சியாளர் உங்களுடனும் உங்கள் குழந்தையுடனும் மயக்க அறைக்கு வருவார். உங்கள் குழந்தை ஒரு பொம்மை அல்லது ஆறுதல் அளிக்கும் ஒரு பொருளை எடுத்துச் செல்லமுடியும். கைப்பேசிகள் அல்லது டேப்லெட்டுகள், விளையாட்டுகள் அல்லது அவர்களுக்கு பிடித்த நிகழ்ச்சிகள் மூலம் குழந்தைகளை திசைதிருப்ப குறிப்பாக பயனுள்ளதாக இருக்கும்.

நீங்கள் விரும்பினால், உங்கள் குழந்தைக்கு மயக்க மருந்து கொடுக்கப்படும்போது அவர்களுக்கு ஆறுதல் கூற அவர்களுடன் இருப்பதற்கு நீங்கள் வரவேற்கப்படுவீர்கள். மிகக் குறைந்த சூழ்நிலைகளில் மட்டுமே இது சாத்தியமில்லாமல் இருக்கலாம்.

நீங்களே மிகவும் கவலையாக இருந்தால், உங்கள் குழந்தையுடன் மயக்க அறைக்கு வர வேண்டியதில்லை. மற்றொரு வயது வந்த குடும்ப உறுப்பினர் அல்லது ஒரு வார்டு செவிலியர் அல்லது விளையாட்டு சிகிச்சையாளர் அதற்கு பதிலாக செல்லலாம். சில பராமரிப்பாளர்கள் தங்கள் குழந்தைக்கு மயக்க மருந்து கொடுக்கப்படும்போது பார்ப்பதை வருத்தமாக உணருகிறார்கள்- நீங்கள் உங்கள் குழந்தையுடன் இருந்தால் கொஞ்சம் உணர்ச்சியை அனுபவிக்க தயாராக இருங்கள்.

உங்கள் குழந்தை ஒரு தள்ளுவண்டியில் படுத்திருக்கையில் மயக்க மருந்து கொடுப்பது தொடங்கப்படலாம். சிறிய குழந்தைகள் உங்கள் மடியில் உட்கார்ந்து இருக்கும்போது மயக்க மருந்து கொடுக்கப்படலாம். சில நேரங்களில், உங்களால் முடிந்தால், உங்கள் உதவியுடன் ஊழியர்கள் அவர்களைத் தள்ளுவண்டியில் ஏற்றுவார்கள்.

மயக்க மருந்தைத் தொடங்குவதற்கு கானுலா பயன்படுத்தப்பட்டால், உங்கள் குழந்தை பொதுவாக மயக்கமடைந்து மிக விரைவாக நெகிழ்ந்துவிடும். சில நேரங்களில் இது மேற் கையில் குளிர்ச்சியான அல்லது முட்கள் குத்துவது போன்ற உணர்வு ஏற்படுத்தலாம். மயக்க மருந்து நிபுணர் ஒரு முகமூடியைப் பயன்படுத்தி மயக்க மருந்தைத் தொடர்ந்து கொடுத்து பாதுகாப்பிற்காக கூடுதல் ஆக்ஸிஜனை கொடுக்கவும் செய்வார்.

மயக்க மருந்து வாயுவுடன் தொடங்கப்படுகிறது என்றால், மயக்கமருந்து நிபுணர் பொதுவாக வாயுவைக் கொடுக்க ஒரு முகமூடியைப் பயன்படுத்துவார், அல்லது வாயுவை, உங்கள் குழந்தையின் மூக்கு மற்றும் வாய் மேல் மெதுவாக

உட்குவிந்த வடிவில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கை வழியாக அனுப்பவார்கள். மயக்கமருந்து வாயுக்கள் ஃபெல்ட்-முனை பேனாக்கள் போன்ற வாசனையுடன் இருக்கும்.

உங்கள் குழந்தைக்கு மயக்க மருந்து கொடுத்தவுடன், மயக்க மருந்து நிபுணர் ஒரு கானுலாவை வைப்பார், இதனால் அவர்கள் வலி நிவாரணம் மற்றும் தேவையான மயக்க மருந்துகளை கொடுக்க முடியும்.

மயக்கமருந்து வேலை செய்ய பொதுவாக சிறிது நேரம் எடுத்துக் கொள்ளும் (சில வினாடிகளிலிருந்து சில நிமிடங்கள் வரை எதுவாகிலும்). இந்த நேரத்தில் குழந்தைகள் அமைதியற்றவர்களாக மாறுவது அல்லது அவர்களின் சுவாசம் வித்தியாசமாக ஒலிப்பது மிகவும் இயல்பானது.

### அடுத்து என்ன நடக்கும்?

உங்கள் குழந்தை உறங்கியவுடன், மயக்க மருந்து குழுவினரை அறுவைச் சிகிச்சையைத் தொடர்வதற்கு அனுமதிக்கும் பொருட்டு, பணியாளர் ஒருவர் உங்களை அறுவைச் சிகிச்சை அரங்கு பகுதிக்கு வெளியே அழைத்துச் செல்வார்.

நீங்கள் உங்கள் குழந்தையுடன் அறுவைச் சிகிச்சை அரங்கிற்குச் செல்ல முடியாது, ஆனால் மயக்கமருந்து வல்லுனர் இந்தச் செயல்முறை முழுவதும் அவர்களுடன் இருப்பார், மேலும் உங்கள் குழந்தையின் இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு, சுவாசம் மற்றும் ஆக்ஸிஜன் அளவுகளை நெருக்கமாகக் கண்காணிப்பார், மேலும் அவை பாதுகாப்பாகவும் முழுமையாக மயக்க மருந்து கொடுக்கப்பட்டிருப்பதையும் உறுதிசெய்வார்.

இப்போது நீங்கள் சென்று சாப்பிடுவதற்கும் குடிப்பதற்கும் ஒரு தகுந்த நேரம், ஆனால் நீங்கள் போகிறீர்கள் என்பதை ஊழியர்களுக்குத் தெரியப்படுத்துங்கள், மற்றும் உங்களைத் தொடர்புகொள்ள ஒரு கைப்பேசி எண்ணை அவர்களுக்குக் கொடுக்கப்போவதாக சொல்லுங்கள்.

## அறுவைச் சிகிச்சைக்குப்பிறகு

### நோய்மீட்டெழும் அறையில்

பெரும்பாலான குழந்தைகள் நோய்மீட்டெழும் அறையில் விழித்துக் கொண்டு விடுகிறார்கள். அவர்கள் விழித்தெழும் போது அது பாதுகாப்பாகவும், பார்வையில் படாமலும் இருக்க அவர்களின் கானுலாவின் மீது ஒரு கட்டு இருக்கும்.

குணமடையும் போது, ஒவ்வொரு குழந்தையும் ஒரு சிறப்பு செவிலியர் அல்லது பிற பொருத்தமான தகுதிவாய்ந்த பயிற்சியாளரால் பராமரிக்கப்படுகிறது, அவர்கள் உங்கள் குழந்தை வசதியாக இருப்பதை உறுதி செய்வார்கள். தேவைப்பட்டால் கூடுதல் வலி நிவாரண மற்றும் நோய் எதிர்ப்பு மருந்துகளை அவர்கள் கொடுப்பார்கள். உங்கள் குழந்தை விழித்தெழுந்து சௌகரியமாக இருக்கும்போது உடன் இருப்பதற்கு நீங்கள் அழைக்கப்படுவீர்கள். மயக்க மருந்து நிபுணர் அருகிலேயே இருக்கிறார், மற்றும் தேவைப்பட்டால் அவர் உதவமுடியும்.

## விழித்தெழும்போது கடுந்துன்பம்

சில குழந்தைகள் விழித்தெழுந்திருக்கும்போது குழப்பம் மற்றும் / அல்லது கடுந்துயரத்தின் சில அறிகுறிகளைக் காட்டுகிறார்கள். இது முன்பள்ளி வயதின் இளைய குழந்தைகளில் அதிகம் நிகழ வாய்ப்பு உள்ளது.

சில குழந்தைகள், குறிப்பாக இளையவர்கள், மிகவும் கிளர்ச்சியடையக்கூடும். அவர்கள் அழுது உருளலாம் அல்லது கை கால்களை அசைக்கலாம். இந்த நடத்தை சுமார் 30 நிமிடங்கள் நீடிக்கலாம் மற்றும் எப்போதாவது அதிக நேரமும் ஆகலாம். இந்த நேரத்தில் குழந்தைகளை கவனித்துக் கொள்வதில் நோய்மீட்டெழுப்பு அறை ஊழியர்கள் அனுபவம் பெற்றவர்கள். இன்னமும் அதிக வலி நிவாரணம் உதவுமா என்பதை அவர்கள் கருத்தில் கொள்வார்கள். உங்கள் குழந்தைக்கு எவ்வாறு சிறப்பாக ஆறுதல் அளிப்பது மற்றும் உறுதியளிப்பது என்பது குறித்து அவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறுவார்கள்.

ஒரு குழந்தை துன்பத்துடன் எழுந்தால் இது இயல்பாகவே பெற்றோருக்கு கவலை அளிக்கிறது. உங்கள் குழந்தை கடந்த காலத்தில் இந்த வகையான மனத்துயரத்தை அனுபவித்திருந்தால், அதை உங்கள் மயக்க மருந்து நிபுணரிடம் சொல்வது நல்லது, இதனால் எதிர்காலத்தில் அதைத் தவிர்ப்பதற்கான வழிகளைப் பற்றி அவர்கள் விவாதிக்க முடியும்.

## வலி நிவாரணம்

வலி நிவாரண மருந்துகள், மற்றும் சில சமயங்களில் உங்கள் குழந்தை முடிந்தவரை வசதியாக எழுந்திருப்பதை உறுதி செய்வதற்காக மயக்க மருந்தின் போது ஓரிட உணர்ச்சி நீக்கி மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. வலி நிவாரண த்தின் வகை, செயல் முறையைப் பொறுத்து இருக்கும்.

உங்கள் குழந்தைக்கான சிறந்தவகை வலி நிவாரணம் பற்றி மயக்கமருந்து நிபுணர், அறுவைச் சிகிச்சை மருத்துவர் மற்றும் / அல்லது மருத்துவமனை ஊழியர்கள் உங்களுடன் பேசுவார்கள்.

## வீட்டிற்குச் செல்வது

இது ஒரு பாதுகாப்பான விருப்பத்தேர்வு என்றும் உங்கள் குழந்தை நன்றாக குணமடைந்து வருவதாகவும் அறுவை சிகிச்சை மற்றும் மயக்க மருந்து நிபுணர் மகிழ்ச்சியடைந்தால், அறுவை சிகிச்சை அல்லது செயல்முறை  நடந்த நாளன்றே உங்கள் குழந்தை வீடு திரும்புவது பெரும்பாலும் சாத்தியமாகும்.

வலி நிவாரண மருந்துகளை வீட்டிலேயே எப்படி கொடுப்பது என்பது குறித்து உங்களுக்கு ஆலோசனை வழங்கப்படும். உங்கள் குழந்தை வீட்டில் மீட்டெழும்போது தயாராக இருக்க குழந்தைக்கு கொடுக்கும் பாராசிட்டமால் மற்றும் இபுப்ரூ◌ஃபன் ஆகியவற்றை கையிருப்பாக வைப்பதும் பயனுள்ளதாக இருக்கும். உங்கள் குழந்தைக்கான வலி நிவாரணம் பற்றி உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளை நீங்கள் மிகவும் கவனமாக பின்பற்ற வேண்டும்.

சில குழந்தைகள் உடல் நிலை சரியில்லை என உணரலாம் அல்லது வீட்டிற்கு செல்லும் போது உடல் நிலை சரியில்லாமலிருக்கலாம். தயாராக இருப்பது உதவியாக இருக்கும்!

அறுவைச் சிகிச்சை நாளன்று உங்கள் குழந்தையை நீங்கள் வீட்டிற்கு அழைத்துச் சென்றால், உங்கள் குழந்தை பற்றி வீட்டில் கவலைகள் இருந்தால், தொடர்பு கொள்வதற்காக உங்களுக்கு ஒரு தொடர்பு எண் கொடுக்கப்படும்.

# நீங்கள் கேட்க விரும்பக்கூடிய கேள்விகள்

உங்கள் குழந்தையின் மயக்க மருந்து பற்றி உங்களுக்கு கேள்விகள் இருந்தால், அவற்றை எழுதுங்கள் (கீழே உள்ள எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தலாம் மற்றும் கீழே உள்ள இடத்தில் உங்களுடையதைச் சேர்க்கலாம்). உங்கள் அறுவைச் சிகிச்சை நாளுக்கு முன்பாக நீங்கள் மயக்க மருந்து மருத்துவர் ஒருவருடன் பேச விரும்பினால், அறுவை சிகிச்சைக்கு முந்தைய மதிப்பீட்டுக் குழுவைத் தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் மயக்க மருந்து மருத்துவர் ஒருவருடன் தொலைபேசியில் பேசுவதற்கு அல்லது அவரை ஒரு மருந்தகத்தில் சந்திப்பதற்கு அவர்களால் ஏற்பாடு செய்ய இயலும்.

1 என் குழந்தைக்கு ஏதேனும் குறிப்பிட்ட அபாயங்கள் உள்ளனவா?

2 மயக்க மருந்து பற்றி என் குழந்தையுடன் நான் எப்போது பேச ஆரம்பிக்க வேண்டும்?

3 என் குழந்தையின் பதட்டத்தை நான் எப்படி சமாளிப்பது?

4 எனது குழந்தை எப்போது பள்ளிக்கு திரும்ப இயலும்?

5 ...

6 ...

7 ...

உரிமைத் துறப்பு

இந்த துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை துல்லியமாகவும் புதுப்பித்ததாகவும் வைத்திருக்க நாங்கள் மிகவும் முயற்சி செய்கிறோம், ஆனால் இதற்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்க முடியாது. இந்தப் பொதுவானத் தகவல், உங்களுக்கு இருக்கக்கூடிய அனைத்து கேள்விகளையும் கொண்டுள்ளது அல்லது உங்களுக்கு முக்கியமானவையாக இருக்கக்கூடிய அனைத்தையும் கையாளும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இந்த துண்டுப்பிரசுரத்தை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உங்கள் தேர்வுகள், மற்றும் உங்களுக்குள்ள ஏதேனும் கவலைகள் பற்றி உங்கள் மருத்துவக் குழுவுடன் நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இந்தத் துண்டுப் பிரசுரம் மட்டும் தனியாக ஒரு அறிவுரையாகக் கருதப்படக் கூடாது. இதை எந்த வணிக அல்லது தொழில் நோக்கத்திற்கும் பயன்படுத்துமுடியாது. முழுமையான பொருப்புத் துறப்பிற்கு தயவுசெய்து இங்கே கிளிக் செய்க (www.rcoa.ac.uk/patient-information/translations/tamil).

அனைத்து மொழிபெயர்ப்புகளும் Translators without Borders சமுதாயத்தால் வழங்கப்படுகின்றன. மொழிப்பெயர்ப்பை முடிந்தவரை துல்லியமாக இருக்க, மொழிப்பெயர்ப்பின் தரம் சரிபார்க்கப்படுகிறது, ஆனால், சில தகவல்களில் தவறுகள் மற்றும் தவறான விளக்கம் ஏற்படும் ஆபத்து உள்ளது.

# நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எங்களிடம் பகிரவும்

உங்களுக்கு ஏதேனும் பொதுவான கருத்துகள் இருந்தால், அவைகளை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்:patientinformation@rcoa.ac.uk

**Royal College of Anaesthetists**
சர்ச்சில் ஹவுஸ், 35 ரெட் லயன் ஸ்கொயர், லண்டன் WC1R 4SG
020 7092 1500

## www.rcoa.ac.uk

### ஏழாவது பதிப்பு, அக்டோபர் 2023

இந்தச் சிற்றேடு பதிப்பான நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் மதிப்பாய்வு செய்யப்படும்.

**© 2023 Royal College of Anaesthetists**
நோயாளித் தகவல் தாள் உருவாக்கும் நோக்கத்திற்காக இந்தத் சிற்றேட்டை பிரதியெடுத்துக் கொள்ளலாம். இந்த அசல் மூலத்தை தயவுசெய்து மேற்கோள் காட்டுங்கள். இந்தச் சிற்றேட்டின் ஒரு பகுதியை நீங்கள் இன்னொரு வெளியீட்டில் பயன்படுத்த விரும்பினால், சரியான ஒப்புகை வழங்கப்பட வேண்டும், வணிகச் சின்னங்கள், அடையாளக் குறியிடுதல், படங்கள் மற்றும் படவுருக்கள் நீக்கப்படவேண்டும். மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து எங்களைத் தொடர்பு கொள்ளவும்.